மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீா்காழி

முன்னிலை : திருமதி **P.** ரங்கேஸ்வரி**.,B.Sc.,B.L.,**
நீதித்துறை குற்றவியல் நடுவா், சீா்காழி.
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீா்காழி(முழுக் கூடுதல் பொறுப்பு)

-------

2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம் ஆவணி மாதம் 13-ஆம்நாள்

------

**அசல் வழக்கு எண்.07/2017-ல் இடைமனு எண்.01/2022**

1. ரெங்ககிரி
2. பரிமளா ...மனுதாரா்கள்/வாதிகள்

...எதிா்...

1. கலியமூா்த்தி
2. ஆண்டாள் ( இறந்துவிட்டாா்) ..எதிா்மனுதாரா்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 18.08.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரா்கள் தரப்பில் வழக்கறிஞா் திரு. B. ரெங்கராஜு அவா்களும், 2-ம் எதிா்மனுதாரா் இறந்துவிட்டதாலும், 1-ம் எதிா்மனுதாரா் தரப்பில் வழக்கறிஞா் திரு ஆா்.காா்த்திக்ராஜன் அவா்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி மனுதாராகள்/ வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 6, விதி 17 - ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரா்கள் அசல் வழக்கின் வாதிகள். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2-ம்எதிா்மனுதாரா்/ 2-ம் பிரதிவாதி இறந்துவிட்டாா். அசல் வழக்கானது 2-ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2-ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரைப்பொறுத்து வழக்குமூலம் அற்றுபோய்விட்டது. எனவே இறந்த 2-ம் பிரதிவாதியைப் பொறுத்து வாரிசு சோ்க்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே இறந்த 2-ம்

பிரதிவாதியைப்பொறுத்து வழக்கின் வழக்குரையில் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் இம்மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது. எனவே இந்த மனுவில் கண்டுள்ளவாறு வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். எனவே இம் மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **1-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். இறந்த 2-ம் எதிர்மனுதாரருக்கு வாரிசு சேர்க்காத காரணத்தை விவரித்து கூறாமலும், அவரது வாரிசுகளை சேர்க்க சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாமல் பிராதை திருத்த மனு தாக்கல் செய்துள்ளது சரியல்ல. திருத்த மனுவில் கண்டுள்ள திருத்த விவரம் சரியல்ல. சரியான திருத்த விவரங்களை குறிப்பிட்டு கூறாமல் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

.4**. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6**. தீர்வு**

மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2-ம்எதிர்மனுதாரர்/ 2-ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், அசல் வழக்கானது 2-ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 2-ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரைப்பொறுத்து வழக்குமூலம் அற்றுபோய்விட்டது என்றும், எனவே இறந்த 2-ம் பிரதிவாதியைப் பொறுத்து வாரிசு சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், எனவே இறந்த 2-ம் பிரதிவாதியைப்பொறுத்து வழக்கின் வழக்குரையில் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் இம்மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது என்றும், எனவே இந்த மனுவில் கண்டுள்ளவாறு வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. 1-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்த 2-ம் எதிர்மனுதாரருக்கு வாரிசு சேர்க்காத காரணத்தை விவரித்து கூறாமலும், அவரது வாரிசுகளை சேர்க்க சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாமல் பிராதை திருத்த மனு தாக்கல் செய்துள்ளது சரியல்ல என்றும், திருத்த மனுவில் கண்டுள்ள திருத்த

விவரம் சரியல்ல என்றும், சரியான திருத்த விவரங்களை குறிப்பிட்டு கூறாமல் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை மனுதாரர்கள்/ வாதி எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2-ம் பிரதிவாதி/ 2-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் அதனைப்பொறுத்து 2-ம் பிரதிவாதிக்கு பின்னாள் இறந்தால் என்று சேர்க்கவும் அதனைப்பொறுத்து இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை ' திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த 2-ம் பிரததிவாதிக்கு வேறு வாரிசுகள் உள்ளனர் என்று குறிப்பிட்டிருந்தாலும் அவ்வாறு ' யார் வாரிசுகளாக உள்ளனர்ள ன்பதை குறிப்பிட்டுக் கூறாத காரணத்தினாலும், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இறந்த 2-ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் இருந்தாலும் கூட 2-ம் பிரதிவாதிக்கு எதிராக எழுந்துள்ள வழக்குமூலம் பொருந்தாது என்பதாலும், இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிப்பதால் வழக்கின் வழக்குமூலமோ, வழக்கின் தன்மையோ மாறிவிடாது என்பதாலும் இம்மனுவில் கண்டுள்ளவாறு பிராதினை திருத்தம் செய்யவேண்டுமெனக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவின் தன்மை கருதி மனுவிற்கான செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு

ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.
(முழுக்கூடுதல் பொறுப்பு)

பின் இணைப்பு

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் - இல்லை-

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் -இல்லை-

மனுதாரர்கள் தரப்பு சான்றாணங்கள் - இல்லை-

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் - இல்லை-

மா.உ.நீ. (மு.கூ.பொ.)

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 07/2017-ல்
இடைமனு எண். 01/2022
நாள் - 29.08.2022